# தினசரி வழிபாட்டு முறை



# 18. ஆதிபராசக்தி

அகணிததாரா கணங்களின் நடுவே
ஆதி பராசக்தி ஆடுகின்றாள்
ஸகல சராசரத்தும் தங்கச்சிலம் பொலிக்க
ஜகதீஸ்வரியவள் ஆடுகின்றாள் 1

அயனென வருவாள் அனைத்தையும் படைப்பாள்
ஹரியென அளிப்பாள் அரனென அழிப்பாள்
அழிவிலிருந்தும் ஜீவன் பிறந்திடச் செய்பவளாம்
அகிலாண்டேஸ்வரி ஆடுகின்றாள் 2

அகிலமுழுதும் உள்ள ஆருயிரினங்களும்
ஆழப்பெருங்கடலில் வாழுயிரினங்களும்
அன்றன்றுணவு கொள்ள அத்தனைக்கும் தந்தருளி
அன்னபூர்ணேஸ்வரி ஆடுகின்றாள் 3

கனக கமலந்தன்னில் கனிந்த சிவப்பொருளைக்
கலந்து பேரின்பங்காட்டும் கனல் வடிவானவளாம்
நானற்ற நல்லோர்க்கெல்லாம் நான் இதோ என்ற் தோன்றும்
ஞான பரமேஸ்வரி ஆடுகின்றாள் 4

இதய வீணை எழும் இன்னிசையவளே
இருளை அகற்றும் தீப ஜோதியும் அவளே
நாற்பத்துமூன்று கோண நாதமணி மண்டபத்தில்
ஸ்ரீ லலிதேஸ்வரி ஆடுகின்றாள் 5

அழைக்குமுன் வருவாள் அடைக்கலம் தருவாள்
அன்பினுக்குட்படுவாள் அனந்த கல்யாணியவள்
அருட்கவிமாலை பாடும் அகத்தியன் அகத்திலே
அமுதசந்த்ரேஸ்வரி ஆடுகின்றாள்
ஆனந்த நாடகம் ஆடுகின்றாள் - அவள்
அகஸ்திய ஸித்தேஸ்வரி ஆடுகின்றாள்